மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

வத்திராயிருப்பு

அசல் வழக்கு எண். 161/2024

வா.சா. 2 – சுந்தரவள்ளி

நாள் 23.07.2025

<u>1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

எனக்கு சொந்த ஊர் சுந்தரபாண்டியம் என்றால் சரிதான். எனது கணவர் பெயர் என்ன என்றால் கருப்பையா. எனது கணவருக்கு எந்த ஊர் என்றால் வத்திராயிருப்பு. எனக்கு எத்தனை வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது என்றால் சுமார் 60 வருடங்கள் இருக்கும். கல்யாணத்திற்கு கொண்டு எனது கணவர் ஊரில் வசித்து வருகிறேன் என்றால் இல்லை. சுந்தரபாண்டியம் ஊரில் வசித்து வருகிறேன். கடந்த 60 வருடங்களாக நான் சுந்தரபாண்டியத்தில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். வாதிகள் எனக்கு என்ன உறவு முறை என்றால் சித்தி மகள் பிள்ளை பேரன்கள் ஆவார்கள். 1வது வாதியின் கணவரும் 2 மற்றும் 2வது வாதிகளின் தகப்பனார் இறந்த பின்பு மேற்படியார்கள் சுந்தரபாண்டியத்திற்கு வந்துவிட்டார்களா என்றால் சரிதான். எனக்கு விவரம் தெரிந்த பின்பு வாதிகள் எத்தனை வருடங்களாக சுந்தரபாண்டியத்தில் இருக்கிறார்கள் என்றால் இரண்டாவது வாதி 7 வயது குழந்தையாக இருக்கும் பொழுது வந்துவிட்டார்கள். அதற்கு பின்பு வாதிகள் கருப்பையா சொந்த ஊருக்கு செல்லவில்லை என்றால் சரிதான். கருப்பையா வகையறாக்களுக்கு என்னென்ன சொத்துக்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 2ம் வாதி செந்தில்குமாருக்கு வழக்கு தாக்கல் செய்யும் பொழுது வயது 30 இருக்கும் என்றால் சரிதான்.

வாதிகளுக்கு வழக்கு தாக்கல் செய்யும் வரை அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் குறித்த விபரம் தெரியாது என்றும் அவர்கள் சொத்துக்களை அனுபவம் செய்யவில்லை என்றும் சொன்னால் சரிதான். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது என்றால் நான் பார்க்கவில்லை. செந்தில்குமாரின் வழக்கறிஞர் தட்டச்சு செய்து வைத்த பேப்பரில் நான் கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். கருப்பையா வகையறாக்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அவர்களுக்கு முன்பு யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். 1 மற்றும் 2 வது பிரதிவாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை தற்போது வரை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். வாதிகள் எத்தனை இலக்கச் சொத்துகளுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் அளித்துள்ள சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

<u>7 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1 மற்றும் 2 வது பிரதிவாதிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணை தங்களது தரப்பில் செய்த குறுக்கு விசாரணையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு